# இந்தியா பெந்தெகொஸ்தே தேவசபை

# THE INDIA PENTECOSTAL CHURCH OF GOD

## தமிழ்நாடு | TAMIL NADU


**Pr. Dr. KINGSLY CHELLAN**
PRESIDENT
PHONE : +91 94882 74557
ADDR : 27/6B BETHANY, MARTHANDAM KANYAKUMARI DISTRICT, TAMILNADU INDIA - 629 165

**Pr. C. SUNDARRAJ JOHNSON**
VICE PRESIDENT
PHONE : +91 94444 71684
ADDR : NO.44/18, V.P.N. COLONY MAINROAD KANNIGAPURAM, CHENNAI, TAMILNADU, INDIA - 600 012

**Pr. S. SOLOMON**
SECRETARY
PHONE : +91 94431 95225
ADDR : CHENTHARAVILAI, ATTOOR, KANYAKUMARI DISTRICT, TAMILNADU INDIA - 629 177

**Pr. JOY ARULRAJ**
JOINT SECRETARY
PHONE : +91 98945 66854
ADDR : ASARIPALLAM, PERVILAI PO NAGERCOIL, KANYAKUMARI DISTRICT TAMILNADU, INDIA - 629 003

**Bro. A. RUBAN**
JOINT SECRETARY
PHONE : +91 98400 91423
ADDR : NO. 16, 1ST STREET, SUBRAMANIPURAM, KOLATHUR, CHENNAI, TAMILNADU, INDIA - 600 099

**Bro. A. INNASIMUTHU**
TREASURER
PHONE : +91 98430 81234
ADDR : 3/1 KIRUBA ILLAM, SENIYAKUDI STREET, WATRAP, VIRUDHUNAGAR, TAMILNADU, INDIA - 626 132



**SENIOR MINISTER**
Pr. J. MATHEWS
Pr. J. J. LAZAR

**MEMBERS**
Pr. Y. Thaaveethu
Pr. Y. Babu Rajan
Pr. Baby Thomas
Pr. T. Christudhas
Pr. P. G. Roy
Pr. Jeyabalan J Devapitchai
Pr. Victor Joseph
Pr. Mariya Susai
Pr. D. Christudas
Pr. M. S. John Rathina Singh
Pr. G. George Ananth
Pr. Johnson. P. Daniel
Pr. Solomon Kennedy
Pr. Thomson Mathews
Pr. David Durai
Br. Enose
Br. Rajarethinam
Br. P. Simson
Br. B. Samson
Br. Raja Kani
Br. Sushil Kumar Mathews
Br. Gurumaran
Br. C. Jaya Zeba
Br. C. Eliza Darving Das
Br. B. Jenkins Bright
Br. M. John Moses Dayan
Br. John Chelliah Selvaraj
Br. Robert Vincent
Br. T. Katerasan

www.ipctn.in


TNS25-29/260921082 Date: 21/09/2026

### கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

### குருமன்றமும் மாநில செயற்குழு கூடுகையும்

### 14 & 15 செப்டம்பர் 2026

2026 செப்டம்பர் மாதம் 14ஆம் தேதி மாலை மாநில குருமன்றமும், 2026 செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி காலை 10 மணி அளவில் தமிழ்நாடு மாநில செயற்குழு கூடுகையும் ஐபிசி தமிழ்நாடு தலைமையகத்தில் வைத்து தலைவர் **பாஸ்டர். கிங்ஸ்லி செல்லன் (Pr. Kingsly Chellan)** அவர்கள் தலைமையிலும் நிர்வாக குழு உறுப்பினர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

இச்செயற்குழுவில் **பாஸ்டர். மரிய சூசை (Pr. Mariya Susai)** அவர்கள் ஆராதனைக்கான பாடல் பாடியபின் **பாஸ்டர். கிறிஸ்து தாஸ் (Pr. Christu dhas)** அவர்கள் ஏசாயா 43:1 முதல் 7 வரை உள்ள பகுதியை வாசிக்க **பாஸ்டர். தாவீது (Pr. Thavethu)** அவர்கள் ஜெபிக்க செயற்குழு இனிதே ஆரம்பமானது. மாநில தலைவர் **பாஸ்டர். கிங்ஸ்லி செல்லன் (Pr. Kingsly Chellan)** அவர்கள் நம்மை சிருஷ்த்தவரும், நம்மை உருவாக்கினவரும், நம்மை மீட்டுக் கொண்டவருமாகிய தேவாதி தேவன், நான் உங்களுடையவர் என்றும், நான் உங்களோடு இருக்கிறேன் என்றும், நான் உங்களை கொண்டு வருவேன் என்று வாக்கு பண்ணுகிறார் என்ற வாக்குதத்த செய்தியை பகிர்ந்து மாநிலத்தின் செயல்பாடுகளை செயற்குழுவுக்கு விவரித்தார். கடந்த மூன்று மாதங்களில் நமது தலைமையக வளாகத்தில் நடந்த நிகழ்வுகள் மற்றும் நமது சபைகளுக்குள் கர்த்தர் செய்த எல்லாவற்றிற்கும் நன்றி செலுத்தி அதற்கு முன்னின்ற செயலாளர் **பாஸ்டர். S. சாலமோன் (Pr. S. Solomon)**, பொருளாளர் **Bro. இன்னாசிமுத்து (Br. Innasimuthu)** மற்றும் பொறுப்பாளர்களுக்கு நன்றிகளை தெரிவித்தார்.

மேலும் நமது தலைமையக வளாகத்தில் (CAMPUS) நடைபெறும் **தமிழ்நாடு பைபிள் செமினாரியுடைய வளர்ச்சி** பற்றி கூறும்போது தற்போது வகுப்புகள் தொடங்கப்பட்டிருப்பதாகவும், ஒரு முழு நேர ஆசிரியரும், ஏழு பகுதி நேர ஆசிரியர்களும் நியமனம் செய்யப்பட்டிருப்பதாகவும், பிள்ளைகளுக்கான உணவு மற்றும் வளாக காரியங்களை பராமரிக்க ஒருவரும் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்பதை தெரிவித்தார். மேலும் ஐபிசி தமிழ்நாடு அலுவலக பொறுப்பாளராகவும் ஒருவரை நியமனம் செய்ததாக அறிவித்தார்கள்.

மேலும் தலைமையக வளாகத்தில் முந்தைய செயற்குழு தீர்மானத்தின்படி **PYPA Green Initiative** என்ற முயற்சியில் நூறு மரங்கள் நட்டு சொட்டுநீர் பாசனம் வைக்கப்பட்டுள்ளது. மேலும் வளாகத்தில் ஏழு ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. அதில் பயிறு வகைகளும், சோளம், நித்திய கல்யாணி ஆகியவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக செயற்குழுவுக்கு தெரிவித்தார்.

நமது மாநிலத்திற்கு உட்பட்ட அனைத்து போதகர்களுக்கும் **ஐடி கார்டு** வழங்குவதற்கான வேலை துவங்கப்பட்டிருப்பதாகவும், அதற்கான வேலைகளை செய்த ஐபிசி தமிழ்நாடு மாநில செயலாளர் **பாஸ்டர். S. சாலமோன் (Pr. S. Solomon)** அவர்கள் மகன் **Br. ஜெரின் சாலமோன் (Br. Jerin Solomon)** அவர்களுக்கு நன்றிகளை செயற்குழு தெரிவித்தது.

நமது **மாநில மிஷன் போர்டு** சம்பந்தமாக சென்டர்களை சந்தித்து தரிசனக் கூடுகைகளை நடத்தி சபைகள் சீஷத்துவ பள்ளிகளையும் சென்டர்களின் மிஷன் இன்ஸ்டிட்யூட் உருவாக்குவதின் மூலம் சபைகளில் விசுவாசிகள் பெருகவும் புதிய சபைகள் உருவாக்கும் பணியும் துவங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்தார்.

மேலும் நமது முன்னாள் தலைவர் **பாஸ்டர். J. மேத்யூஸ் (Pr. J. Mathews)** அவர்களின் தரிசனத்தின்படி கட்டப்பட்ட முதியோர் இல்லத்திற்கான கட்டிடத்தில் முதியோர் இல்லம் துவங்குவதற்கு **Charity And welfare board** மூலம் பணிகள் துவங்கி இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் நமது ஐபிசி தமிழ்நாடு வங்கி கணக்குகள் புதுப்பிக்கப்பட்டு **எல்லா துறைகளுக்கும், வாரியங்களுக்கும்** தனித்தனியாக வங்கி கணக்கு துவங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பின்பு மாநிலச் செயலாளர் **பாஸ்டர். S. சாலமோன் (Pr. S. Solomon)** அவர்கள் 2026 ஜூன் மாதம் 19ஆம் தேதி நடந்த மாநில செயற்குழு அறிக்கையை வாசித்து சமர்ப்பித்தார். அந்த அறிக்கையை **பாஸ்டர். தாவீது (Pr. Thavethu)** அவர்கள் முன்னொழிய **Bro. C. J. ஸிபா (Br. C. J. Zeba)** அவர்கள் வழி மொழிய திருத்தமின்றி ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதை தொடர்ந்து மாநில பொருளாளர் **Bro. இன்னாசிமுத்து (Br. Innasimuthu)** அவர்கள் கடந்த மூன்று மாதங்களுக்கான வரவு செலவு கணக்குகளை செயற்குழுவில் சமர்ப்பித்தார். அக்கணக்குகளையும் செயற்குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

## செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்:

### 1. இரங்கல் தீர்மானம்

- பெரம்பலூர் சென்டரில் ஊழியம் செய்து வந்த **பாஸ்டர். ஜான் ஜெயவேல் (Pr. John Jeyavel) கர்த்தருக்குள் நித்திரை அடைந்ததை** குறித்து ***பாஸ்டர். மரிய சூசை (Pr. Mariya Susai)*** அவர்கள் சாட்சியாக அறிவித்தார். மேலும் சென்னை அம்பத்தூர் சென்டரை சார்ந்த **பாஸ்டர். ஜான் அன்பழகன் (Pr. John Anbalagan)** அவர்களுடைய மறைவை குறித்தும் அவர்களுடைய ஊழியங்களை குறித்தும் மேலும் விபத்து குறித்து ***சகோதரர். சிம்சோன் (Br. Simson)*** அவர்கள் விளக்கி கூறினார்கள். அதை தொடர்ந்து மார்த்தாண்டம் சென்டரை சேர்ந்த மறைந்த **பாஸ்டர். லூகோஸ் (Pr. Lukose)** அவர்களுடைய துணைவியாரும் **பாஸ்டர். பின்னி (Pr. Binny)** அவர்களுடைய தாயாருமான **Mother. செல்லதாய் (Mother. Chellathai)** அவர்கள் மறைவை குறித்தும், ஊழியங்கள் குறித்தும் ***பாஸ்டர். சாலமன் கென்னடி (Pr. Solomon Kennedy)*** அவர்கள் விளக்க ***பாஸ்டர். ராய் வாழமுட்டம் (Pr. Roy Vazhamuttom)*** அவர்கள் இந்த குடும்பங்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபித்தார்கள்.

## 2. மாநில குருமன்ற தீர்மானத்தை அங்கீகரிப்பது தொடர்பாக:

### குருமன்ற தீர்மானங்கள் முறையே:

#### I. சென்டர் சம்பந்தமாக:

» மாநிலத்திற்கு உட்பட்ட சபைகள் இணைந்து சென்டர்கள் அமைக்கப்படும் போது நமது ஐபிசி சட்ட விதிகளின்படி 21 அங்கத்தினர்கள் கொண்ட 15 லோக்கல் சபைகளும் குறைந்தபட்சம் 300 ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளும், நமது முன் தீர்மானத்தின்படி குறைந்தபட்சம் 3 இடங்களில் ஐபிசிக்கு சொந்தமான நிலங்களும், கட்டிடங்களும் உள்ள அமைப்பிற்கு மாவட்டம் என்ற அங்கீகாரம் வழங்குவது எனவும், பதினைந்து சபைகள் இல்லாத பட்சத்தில் தரிசனம் உள்ள 10 ஊழிய ஸ்தலங்கள் உள்ள அமைப்பிற்கு மிஷன் ஏரியா என அங்கீகாரம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது

#### II. இடைக்கோடு சென்டர் சம்பந்தமாக:

» இடைக்கோடு சென்டருக்கு உட்பட்ட ஊழியர்களில் தலைவர் மற்றும் சிலர் தங்களுக்கு தனி அமைப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று விண்ணபித்த விண்ணப்பத்தின் பேரிலும், கடந்த செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டபடி தங்கள் ஊழியர்களின் புள்ளிவிவர பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டதின் பேரிலும் நமது முதல் தீர்மானத்தின் அடிப்படையிலும், புதிய அமைப்பாக **ஐபிசி கண்ணுமாமூடு (KANNUMAMOODU) மிஷன் ஏரியா** உருவாக்குவது எனவும், ஏற்கனவே செயல்பட்டு வரும் இடைக்கோடு சென்டர் தொடர்ந்து செயல்படவும் நமது முதல் தீர்மானத்தின்படி ஐபிசி சட்ட விதிகளின் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில் மாவட்ட அந்தஸ்து வழங்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

#### III. தூத்துக்குடி, நெல்லை நார்த், நெல்லை சவுத், களக்காடு, சென்டர்கள் சம்பந்தமாக:

» தூத்துக்குடி, நெல்லை நார்த், நெல்லை சவுத், களக்காடு ஆகிய சென்டர்கள் ஐபிசி சட்ட விதிகளின் நிபந்தனைகளுக்கு உட்படாமல் இருப்பதால் அவைகளை நேரில் சந்தித்து ஒன்றிணைத்து ஒழுங்குபடுத்த தலைவர் மற்றும் செயலாளருக்கு அங்கீகாரம் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

#### IV. கூடங்குளம் சென்டர் சம்பந்தமாக:

» கூடன்குளம் சென்டர் சம்பந்தமான விஷயங்கள் பல செயற்குழுக்களில் விவாதிக்கப்பட்டு முடிவு காணப்படாத பட்சத்தில் அதை ஒழுங்குபடுத்த மாநில சட்ட ஒழுங்கு நடவடிக்கை வாரியத்திற்கு அதிகாரம் வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது.

#### V. Pr. பிரகாஷ் வாழைத்தோப்பில் அவர்களின் Credentials ரத்து செய்தல் தொடர்பாக:

» **Pr. பிரகாஷ் வாழைத்தோப்பில் (Pr. Prakash Vazhathopil)** அவர்கள் **திருச்சி சபையிலிருந்து தற்காலிகமாக பணிநீக்கம்** செய்யப்பட்டிருந்த நிலையில், **கடந்த மாநில குருமன்றக் கூட்டத்தில்** அவரது **பணிநீக்கம் ரத்து செய்யப்பட்டபோது**, மாநில குருமன்றம் முன்வைத்த **சபைகளில் ஊழியம் செய்வதற்கு அவர் விருப்பம் தெரிவிக்காத** பட்சத்தில், தகுந்த **சபை ஒதுக்கப்படும்** வரை **காத்திருக்குமாறு** அவருக்கு **அறிவுறுத்தப்பட்டிருந்தது.**

மேலும், அவர் ஏற்கனவே ஊழியம் செய்த **வத்திராயிருப்பு சபையிலிருந்து** இடமாற்றம்

செய்யப்பட்டபோது, **அச்சபையிலிருந்து பிரிந்து தனியாக ஆராதனை செய்து வந்த விசுவாசிகளுடன் தனக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை** என அவர் **மாநில குருமன்றத்தின் முன் தெரிவித்திருந்தார்**

ஆயினும், தற்போது **மேற்குறிப்பிட்ட விசுவாசிகளை ஒருங்கிணைத்து, வத்திராயிருப்பு பகுதியில் புதிய சபை ஒன்றை ஆரம்பித்து நடத்தி வருவது** நிர்வாகக் குழுவின் கவனத்திற்கு வந்துள்ளது.

இந்நிலையில், மேற்கண்ட செயல்பாடுகளை மாநில குருமன்றம் பரிசீலித்து, **Pr. பிரகாஷ் வாழைத்தோப்பில் (Pr. Prakash Vazhathopil)** அவர்களின் **அடிப்படை உறுப்பினர் தகுதியை ரத்து** செய்ய பரிந்துரை செய்ததன் பேரில், **Pr. பிரகாஷ் வாழைத்தோப்பில் (Pr. Prakash Vazhathopil)** அவர்களுக்கு IPC தமிழ்நாடு மாநிலத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனைத்து **Credentials-களையும் ரத்து** செய்வது என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

### VI. நாகர்கோவில் சென்டர் இடம் மாற்றம் சம்பந்தமாக:

» நாகர்கோவில் சென்டர் சார்பில் **பாஸ்டர். யோனத்தான் (Pr. Yonathan)** நெசவாளர் காலனி சபையில் இருந்து விடுவிக்கப்பட்டு **நெசவாளர் காலனி** சபைக்கு **பாஸ்டர். மோசஸ் (Pr. Moses)** அவர்களை நியமித்து நாகர்கோவில் சென்டர் எடுத்த தீர்மானத்தை மாநில குருமன்றம் ஏற்றுக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

### VII. மார்த்தாண்டம் சென்டர் இடமாற்றம் சம்பந்தமாக:

» மார்த்தாண்டம் சென்டருக்குட்பட்ட **பனங்காலை சபையில்** ஊழியம் செய்து வந்த **பாஸ்டர். சுரேஷ் (Pr. Suresh)** அவர்களை **மூவோட்டு கோணம் IPC பெதஸ்தா சபையில்** இடமாற்றம் செய்வது எனவும் **பொற்றவிளை சபையில்** ஊழியம் செய்து வந்த **பாஸ்டர். ஜிகின் குமார் (Pr. Jigin Kumar)** அவர்களை **பனங்காலை சபையில்** இடமாற்றம் செய்வது எனவும், **புளியறை சபையில்** ஊழியம் செய்து வந்த **Eva. ஷாஜி (Eva. Shaji)** அவர்களை **பொற்றவிளை சபையில்** இடம் மாற்றம் செய்வது எனவும், **மார்த்தாண்டம் செயற்குழு** எடுத்த தீர்மானத்தை மாநில செயற்குழு ஏற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

## 3. தலைமையகவளாக (CAMPUS) மேம்பாடு சம்பந்தமாக:

- நமது தலைமையக வளாகத்தில் (CAMPUS) இருக்கும் மின் **இணைப்பு குறைபாடுகள், சொத்து பிரச்சனைகள்** ஆகியவையை நிவர்த்தி செய்ய **நிர்வாகக் குழுவுக்கு அங்கீகாரம்** வழங்குவது எனவும், தற்போது இயங்கி வரும் **செக்யூரிட்டி சர்வீஸ்** தொடர்வது எனவும், புதிதாக செயல்பட்டுவரும் **விவசாய திட்டங்கள்** நிறைவேற்றுவது எனவும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## 4. TBS சம்பந்தமாக:

- TBS சம்பந்தமாக எடுத்துள்ள முயற்சிகளுக்கு **அங்கீகாரம் வழங்குவது** எனவும் **இறையியல், கல்வியியல் வாரியம்** அதை முழுமையாக நிர்வகிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## 5. மிஷன் போர்டு சம்பந்தமாக:

- **மிஷன் போர்டு** மூலம் எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளை செயற்குழு அங்கீகரிப்பது எனவும் **சபை வளர்ச்சி மற்றும் சபை நிறுவுதல்** திட்டங்களில் உதவி செய்பவரை எழுப்ப வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## 6. Charity board சம்பந்தமாக:

- **Charity board** சம்பந்தமாக **முதியோர் இல்லம்** துவங்குவது பற்றி விவாதிக்கப்பட்டது. முதியோர் இல்லத்தை **ஜனவரி 2027க்குள் தொடங்குவது** எனவும், அந்த இல்லத்திற்கான உதவிகளை **Loving Hands Mission** மூலம் பெறுவது எனவும் உழியர்களுக்கான **ரிட்டயர்மென்ட் மற்றும் இன்சூரன்ஸ் பாலிசி** பற்றி அதிக தகவல்கள் அறிந்து அடுத்த செயற்குழுவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என **Bro. C. J. ஸிபா (Br. C. J. Zeba)** அவர்களிடம் கேட்டுக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

## 7. Sunday school ஊழியங்கள் சம்பந்தமாக:

- **Sunday school** ஊழியங்களின் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்கு, **Sunday school** செயற்குழுவின் தீர்மானபடி கொடுக்கப்பட்ட கடிதத்தின் பேரில் **பாஸ்டர். ரிஜு M குரியன் (Pr. Riju M Kurian)** அவர்கள் **ஞாயிறுபள்ளியின் இயக்குனராகவும், பாஸ்டர். டி எஸ் பிரசாத் (Pr. T. S. Prasad)** அவர்கள் **வடக்கு மண்டல இணை இயக்குனராகவும், பாஸ்டர். ஜஸ்டின் ஜெ (Pr. Justin J)** அவர்கள் **மத்திய மண்டல இணை இயக்குனராகவும்** நியமனம் செய்ய அங்கீகாரம் அளிக்க தீர்மானிக்கப்பட்டது.

## 8. 2027 மாநில பொது கன்வென்ஷன் சம்பந்தமாக:

- **மாநில கன்வென்ஷன் 2027** ஜனவரி மாதம் 13ம் தேதி முதல் 17ஆம் தேதி வரை நடத்துவது எனவும் இக் கன்வென்ஷனில் செய்தியாளர்களை **மாநில நிர்வாக குழு** அழைத்து அதற்கான ஒழுங்குகளை செய்வது எனவும் மற்றும் பொறுப்புகளை கீழ்காணும் வாரியங்கள் முறையே தேர்வு செய்யப்பட்டது:

| S. No | Board / Department | Members |
|---|---|---|
| 1 | Prayer Board | Pr. Joy, Pr. Victor Joseph |
| 2 | Finance Board | Br. Innasimuthu, Br. John Moses Dayan, Pr. Jayabalan |
| 3 | Media & Publicity | Br. C. J. Zeba, Pr. Roy Vallamuttom, Br. Elisa, Pr. George Anand |
| 4 | Food & Catering | Pr. S. Solomon, Pr. Christhudhas (Mugilankarai), Br. Enose |
| 5 | Reception & Registration | Br. Sushil Mathew, Br. Jerin Solomon, Br. Jenkins Bright |
| 6 | Lodging & Accommodation | Pr. John Suresh, Pr. Jeba Nesa Kumar, Br. Arputharaj |
| 7 | Pandal, Light & Sound | Pr. John Ratna Singh, Pr. Solomon Kennedy, Br. John Chelliya, Br. Samson |
| 8 | Music & Worship | Pr. David Durai, Pr. Sweetson |
| 9 | Volunteers & Hospitality | Br. Simson, Br. C. J. Zeba, Pr. Gabriel, Pr. Mahimaraj |

மேலும் கீழ்க்காணும் (P.T.O) அட்டவணைப்படி எல்லா சென்டர்களும் கன்வென்ஷனுக்கு உதவி செய்வது எனவும், எல்லா சபை போதகர்களும் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் எனவும், ஞாயிறு ஆராதனை மாநிலத்தின் ஒருங்கிணைந்த ஆராதனையாக இருப்பதால் ஊழியர்களும் விசுவாசிகளும் கலந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

| வ.எண் | இடம் / பெயர் | தொகை |
| --- | --- | --- |
| 1 | AMSI | 30000 |
| 2 | ARUMANAI | 30000 |
| 3 | ATTOOR | 30000 |
| 4 | CHENGALPET EAST | 30000 |
| 5 | CHENNAI AMBATTUR | 50000 |
| 6 | CHENNAI CENTRAL | 50000 |
| 7 | CHENNAI METRO | 50000 |
| 8 | CHENNAI NORTHEAST | 30000 |
| 9 | CHENNAI THIRUVALLUR KANCHIPURAM | 50000 |
| 10 | CHENNAI WEST | 30000 |
| 11 | COIMBATORE | 10000 |
| 12 | COIMBATORE NORTH | 10000 |
| 13 | DINDIGUL | 20000 |
| 14 | EDAICODE | 30000 |
| 15 | KALAKKAD | 10000 |
| 16 | KANNUMAMOODU M.A | 30000 |
| 17 | KODAIKANNAL | 50000 |
| 18 | KUMBAKONAM | 30000 |
| 19 | MADURAI | 60000 |
| 20 | MARANCONAM | 30000 |
| 21 | MARTHANDAM | 75000 |
| 22 | MAYILADUTHURAI | 7000 |
| 23 | MUGILANKARAI | 30000 |
| 24 | NAGERCOIL | 75000 |
| 25 | NELLAI NORTH | 30000 |
| 26 | NELLAI SOUTH | 25000 |
| 27 | PALLAVILAI | 50000 |
| 28 | PANACHAMUDU M.A | 20000 |
| 29 | PERAMBALUR | 15000 |
| 30 | POLLACHI | 25000 |
| 31 | SALEM | 30000 |
| 32 | TENKASI | 30000 |

| வ.எண் | இடம் / பெயர் | தொகை |
|---|---|---|
| 33 | THENI | 20000 |
| 34 | THIRUVARUR | 7000 |
| 35 | THOOTHUKUDI (TUTICORIN) | 40000 |
| 36 | THUNGAVI | 10000 |
| 37 | TIRUPUR | 10000 |
| 38 | TRICHY | 30000 |
| 39 | WATRAP | 30000 |
| 40 | PYPA | 25000 |
| 41 | SUNDAY SCHOOL ASSOCIATION | 25000 |
| 42 | WOMEN'S FELLOWSHIP | 25000 |
| 43 | PR. JOHNSON DANIEL | 50000 |
| 44 | PR. KINGSLY CHELLAN | 25000 |
| 45 | BR. A. RUBAN | 25000 |
| 46 | PR. S. SOLOMON | 25000 |
| 47 | BR. INNASIMUTHU | 20000 |
| 48 | MRS. RACHEL SUNDARRAJ | 25000 |
| 49 | BR. RAJARATHINAM | 10000 |
| 50 | PR. BABY THOMAS | 10000 |
| 51 | BR. SIMSON | 20000 |
| 52 | BR. SAMSON | 10000 |
| 53 | PR. SAMUEL JOSEPH | 25000 |
| 51 | BR. C. J. ZEBA | 25000 |
| 52 | PR. RUBAN SAMUEL (POWER IPC) | 25000 |
| 53 | DR. DANIEL | 25000 |
| 54 | BR. SUNDARAM | 10000 |
| 55 | BR. ALEX THOMAS | 5000 |
| 56 | BR. RAJAGANI | 5000 |
| 57 | BR. KANAGARAJ | 5000 |

## 9. கன்வெஷனுக்காக ஜெப கூடுகைகள் சம்பந்தமாக:

- **நமது ஐபிசி சபைகளின் 103வது பொது (கும்பநாடு) கன்வென்ஷனுக்காகவும் மற்றும் நமது மாநில பொது கன்வென்ஷனுக்காகவும்** சிறப்பு ஜெபங்கள் ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது அதன்படி:

- **26/10/2026** அன்று **சவுத் சோண் (South Zone)** சபைகள் இணைந்து **ஐபிசி மார்த்தாண்டம் சபையிலும்**
- **27/10/2026** அன்று **சென்ட்ரல் சோண் (Central Zone)** சபைகள் இணைந்து **நமது தலைமையகத்திலும்**
- **29/10/2026** அன்று **நார்த் சோன் (North Zone)** சபைகள் இணைந்து **சென்னை அம்பத்தூரிலும்** நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

## 10. Br. சிம்சன் சம்பந்தமாக:

- **Br. சிம்சன் (Br. Simson)** அவர்களுக்கு முந்தைய கவுன்சிலில் எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் அவரது **மன்னிப்பு கடிதம் ஏற்றுக் கொள்ளப்படுவது** எனவும் தற்போது அவர் **மதுரை சென்டர்** ஊழியங்களில் ஈடுபடுவதால் **வத்திராயிருப்பு சென்டர்** மற்றும் **சபைகளின் எந்த காரியங்களிலும் ஈடுபட வேண்டாம்** எனவும் அறிவுறுத்தி தீர்மானிக்கப்பட்டது.

## 11. புதிய சென்டர்கள் அங்கீகரிப்பது சம்பந்தமாக:

- **சென்னை, தாம்பரம், கம்பம்** ஆகிய பகுதிகளிலிருந்து **சென்டர்** அங்கீகாரத்திற்கு அளிக்கப்பட்ட மனுக்கள் பரிசீலிக்க பட்டு மேற்கூறிய ஒன்றாம் தீர்மானத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு **சபைகள் மற்றும் ஊழியர்களின் புள்ளி விவரங்கள்** சமர்ப்பிக்கும் பட்சத்தில் அங்கீகாரம் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

இறுதியில் மாநில உப தலைவர் **பாஸ்டர். சுந்தர்ராஜ் ஜான்சன் (Pr. Sundarraj Johnson)** அவர்கள் ஜெபித்து ஆசிர்வாதம் கூற இனிதே நிறைவடைந்தது.

உங்கள் சேவைக்காக,

Pr. S. **சாலமோன்**
மாநிலச் செயலாளர், ஐபிசி தமிழ்நாடு
secretary@ipctn.in | +91 94431 95225